16-7-72

# ஆத்மஜோதி



மாணிக்கவாசக சுவாமிகள்

பரிதாபி ஹூ ஆனி - ஆடி - 1972.





ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. — சுத்தானந்தர்

ஜோதி - 24 பரிதாபி ௵ ஆனி, ஆடி ௴ 1ம்௳ [16-7-72] சுடர் -8-9

# பொருளடக்கம்


| | |
|---|---|
| மாணிக்கவாசகர் வணக்கம் | 181 |
| மணிவாசகரும் திருவைந்தெழுத்தும் | 182 |
| அன்பின் உருவம் | 183 |
| மணிவாசகரும் திருப்பெருந்துறையும் | 188 |
| மறப்பதெப்படி? | 198 |
| சென்னை தாம்பரம் அடியார் கோஷ்டியினர் ஈழநாட்டில் திருத்தல யாத்திரை | 204 |
| அக்கம்மாவின் அகவாழ்வு | 205 |
| இயற்கையே சோதிடம் — 20ம் பாடம் | 207 |
| பெருவெளி | 211 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# மாணிக்கவாசகர் வணக்கம்

தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே! மாணிக்க
வாசகனே ஆனந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீ திருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம்நான் அனுபவிக்க அருளுதியே!

தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே!
நாடுகின்ற வாதவூர் நாயகனே! நாயடியேன்
வாடுகின்ற வாட்டம் எல்லாம்வந்து ஒருக்கால்மாற்றுதியே!

சேமமிகும் திருவாதவூர்த்தேவு என்று உலகுபுகழ்
மாமணியே! நீ உரைத்த வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகு காதலன்தன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன்பு எய்துவதே!

மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவம்செய்வார் எல்லோரும் ஏமாக்க
அன்புஉருவம் பெற்றுஅதன்பின் அருள்உருவம் அடைந்து
இன்புஉருவம் ஆயினைநீ எழில்வாதவூர் இறையே! (பின்னர்

—இராமலிங்க சுவாமிகள்

செய்ய வார்சடைத் தெய்வசிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப!
பா எனப்படுவது உன்பாட்டு
பூ எனப்படுவது பொறிவாழ் பூவே!

—சிவப்பிரகாசர்

பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்துபெருந் துறைக்கடலுண்டு
ஆசில்எழில் தடித்துஅயர அஞ்சுஎழுத்தால் அதிர்த்துஎழுந்து
தேசமலி தரப்பொதுவார் சிவபோகம் மிகவிளைவான்
வாசகமா மாணிக்க மழைபொழிமா முகில்போற்ற!

—உமாபதி சிவாச்சாரியார்

★★

# மணிவாசகரும் திருவைந்தெழுத்தும்

"நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!"

★

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சி வாய புறம்எனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி! போற்றி!

★

"நமச்சிவாய என்றுன்னடி பணியாப்
பேயனுகிலும் பெருநெறி காட்டாய்"

★

"இனியென்னே உய்யுமாறென்றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை"

★

"நானேயோ தவஞ்செய்தேன்
சிவாய நமவெனப் பெற்றேன்"

★

"எண்ணிலேன் திருநாம அஞ்சு எழுத்தும்
ஏன் ஏழமை அதனுலே"

★

"இப்பிறப்பினில் இணைமலர் கொய்துநான்
இயல்பொடஞ்செழுத் தோதி"

★

"உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்துட் பொருளை
ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

# அன்பின் உருவம்

(ஆசிரியர்)

அன்புக்குச் சொல்லால் உருவம் கொடுத்தால் அது திருவாசகம்; தேனில் எப்பகுதியைச் சுவைத்தாலும் அது தேன் தான். அதேபோல் திருவாசகத்தில் எப்பகுதியைச் சுவைத்தாலும் அன்பின் உருக்கத்தை அங்கு காணலாம். திருவாசகத்திற்குப் பொருள் கூறுமாறு தில்லையிலுள்ளார் கேட்ட போது 'சிவமே' பொருள் என மணிவாசகர் கையால் சுட்டிக் காட்டி அதே சிவத்தோடு இரண்டறக் கலந்தருளினார். அன்பே சிவம் என்பதனைச் செயலிலேயே காட்டிவிட்டார் மணிவாசகர்.

திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பது அனுபவத்தில் கனிந்து வந்த பழமொழி. என்னையும் உருக்கும் பாடல்களைச் சுவாமிகள் பாடினார்.

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்பது பைபிள் வாக்கியம். இதற்கு இலக்கிய புருஷர் யேசுக் கிறிஸ்துவாகத்தான் இருக்க வேண்டும் என ஜி. யூ. போப் துரை நம்பினார். திருவாசகத்தைப் படித்தார். உள்ளம் உருகினார். திருவாசகத்தை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பை நனைத்தார். மணிவாசகரிலும் பார்க்க எளிமையுள்ள ஒருவரைப் பார்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். தான்பெற்ற இன்பம் வையகமும் பெறவேண்டும் என நினைந்தார். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்கு வழங்கினார்.

திருவாசகத்தை மணிவாசகர் வாயால் மாத்திரம் கேட்டால் போதாது. தானே உணர்ந்து உணர்ந்து எழுத வேண்டும், எழுதும்போது அதனை அனுபவிக்க வேண்டும் என்று நினைந்தார். அந்தணர் வேடம்தாங்கி தில்லையிலிருந்த மணிவாசகரைத் தேடிச் சென்றார். ஏடும் எழுத்தாணியுமாக மணிவாசகர் முன்னால் இருந்தார். மணிவாசகர் கூறக் கூறத் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எழுதி முடித்தார். மனிதன் சொல்ல ஆண்டவன் எழுதிய பெருமை திருவாசகம் ஒன்றிற்கே உரியது.

இறைவன் அன்பு மயன், ஆனந்த மயன். அவன் எழுதிய திருவாசகமும் அன்புமயமானது; ஆனந்தமயமானது. இதனாலேதான் அன்பு இல்லாதவர்களும் திருவாசகத்தை ஓதினால் அன்பின் உருவமாக மாறிவிடுகிறார்கள். திருவாசகத்தைத் தமது தினசரி பாராயணமாகக் கொண்டவர்கள் அன்பின் உருவத்திற்கு இலக்கியமாகவே மாறிவிடுகின்றார்கள். வள்ளலார் திருவாசகத்தை ஓதி அன்புருவானார். திருவாசகம் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாது இனித்தது என்று கூறினார். மணிவாசகர் எவ்வாறு இறைவனோடு இரண்டறக் கலந்தாரோ, அதேமாதிரி வள்ளலாரும் இறைவனோடு இரண்டறக் கலந்த செய்தியைப் படிக்கின்றோம்.

மனித உருவிலே அன்புக்கு உருவம் மணிவாசகர். சொல்லுருவிலே அன்புக்கு உருவம் திருவாசகம். தியான உருவிலே அன்புக்கு உருவம் அன்புச்சிவம். மணிவாசகரை இன்று கண்ணால் காண முடிவதில்லை. ஆனால் அவர் திருவாசகத்தின் உருவமாக மாறிவிட்டார். ஆகவே திருவாசகத்தை உள் உணர்ந்து ஓதினால் அதாவது பொருள் உணர்ந்து ஓதினால் அன்புச்சிவத்தை அடையலாம்.

'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரம்'

என்று அவரே பாடியுள்ளார்.

சிவபுரம் செல்பவர்கள் யாரைத் தரிசிப்பார்கள்? அன்பின் உருவைத் தரிசிப்பார்கள். மணிவாசகப் பெருமானது உள்ளத்தைத் திருவாசகத்திலேதான் காண முடியும். ஒருவருடைய உடல் வளர்ச்சியை சரித்திரம் என்று சொல்லுவதிலும் பார்க்க உள்ளவளர்ச்சியே அவரது உண்மைச் சரித்திரமாகும். உடல் வளர்ச்சி மிருகங்களுக்கும் உண்டு; பறவைகளுக்கும் உண்டு; கல்லுக்கும், மலைக்கும், மரத்திற்கும் உண்டு. ஆகவே மனித சரித்திரம் என்பது மன வளர்ச்சியையும் ஆத்ம வளர்ச்சியையும் பொறுத்ததாகவே அமைய வேண்டும்.

''பத்துடையீர் ஈசன்பழவடியீர்''

என்று மணிவாசகர் அழைக்கும் பத்துடையடியவரது திருக்கூட்டம் வாழையடி வாழையென வந்து மக்களை வாழ்விக்குமென்பது தமிழர் கொள்கை.

''இறைவன் கழலேத்தும் செல்வம் செல்வமே''
''செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே''

என்பது அன்புருவினராகிய அடியவர் திருக்கூட்டத்தின் துணிபு. பக்தியின்பம் கவியின்பத்தோடு கலந்து பெருக்கெடுத்து வரும் பொழுது மக்களுள்ளம் இயற்கையாகவே வசீகரிக்கப்பெறுகின்றது. மக்கள் வாழ்க்கை எளிதில் மலர்ச்சி பெறுகின்றது. ஒரு மகாகவி தீர்க்கதரிசியுமாவான். ஒரு மகா பக்தன் ஓதாதுணர்ந்த உயர் ஞானியாகவும் உண்மைக் கவியாகவும் விளங்குதல் கூடும். பக்திச் சுவையோடு கவிச் சுவை இரண்டறக் கலந்த நிலையில்,

''இச்சுவைதவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்''

என்று அறிஞராகிய இரசிகர் துணிவது இயல்பே யாகும். பக்திக் காதலும் கவிவனப்பும் தம்முட்கலந்து ஓருருவமா

கச் சமைந்து மணிவ்ாசகப் பெருமாளுக விளைந்து வருகின் றன எனக் கூறுவது மிகையாகாது.

திருவாலவாய் எம்பெருமாளுகிய சொக்கன் அருளால் மணிவாசகரது உள்ளத்தே தழைத்து வளர்ந்த பக்தி தண் ணுர் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டிலே,

''உயர்மதிற் கூடலினுய்ந்த ஒண்தீந்தமிழின் துறைகள்''

வாயிலாக நுழைந்து, வளமும் வனப்புமுற்று வெளிப்படுகின் றது. சிவமணத்தோடு தமிழ்மணமும் அளாவி, இவரது பாடல்கள் என்றும் புதிய—என்றும் இனிய—தென்றல்போல உலாவி வருகின்றன. ''ஒண்தீந்தமிழ்'' என்பது போன்ற சொற்ருெடர்கள் இவரது மொழிப்பற்றினை இனிது விளக்கு கின்றன.

மணிவாசகரது ஆன்மதாபமும் அறிவுத்தாகமும் அவ ரது திருவாசகத்தில் அடிக்கடி வெளிப்படுகின்றன.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி எளியையை ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
யின்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

இத்தகைய ஞானபக்தி வெள்ளம் இவரது தாபத்திற்கும் தாகத்திற்கும் சாந்தி அளிக்கின்றது. இவர் கவியுள்ளத்தின் சிறப்பியல்பு, கருங்கல் மனத்தினையும் கரைந்துருகச் செய் வதேயாகும்.

''குற்ருலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்ருவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே''

என்பது மணிவாசகர் பிரார்த்தனை. இது முற்றும் கைகூடிய தென்பதற்கு இவரது பாடல்களே சான்றாகும்.

''என்பு நைந்துருகி நெக்கு நெக்கேங்கி
அன்பெனு மாறு கரையது புரள
நன்புலனொன்றி நாதவென்றரற்றி
உரைதடுமாறி யுரோமஞ்சிலிர்ப்பக்
கரமலர்மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்ப''

அகங்கரைந்துருகும் சிறப்பியல்பு மணிவாசகரது கவியுள்ளத்தின் சிறப்பியல்பேயாகும். திருவாசகத்தை மெய்யன்போடு ஓதுவார் தற்போதமிழந்து

"நான்படிக்கும் போதென்னை நானறிவேன் நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவம்''

பெறுவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. உணர்வை உருக்கிப் புத்துயிரளிப்பதில் திருவாசகம் தலைசிறந்து விளங்குகின்றது.

---

மெய்தான ரும்பி விதிர் விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்!
என்னைக் கண்டு கொள்ளே.

—மணிவாசகர்

# மணிவாசகரும் திருப்பெருந்துறையும்

புதுக்கோட்டை,
சாயி அன்னை, சிவ. பிருந்தாதேவி

ஆ - என்றால் மனம். லயம் - என்றால் லயிக்கும் இடம். அல்லது ஒன்றுமிடம். மனம் ஒன்றுகின்ற அல்லது லயிக்கின்ற இடம் ஆலயம். கோ - என்றால் தலைவன். (உள்ளத்தை ஆள்கின்ற தலைவன்) இல் - என்றால் இருக்குமிடம். உள்ளத்தை ஆள்கின்ற நல்லதொரு தலைவன் இருக்கின்ற இடம் கோயில்.

உடம்பை வளர்க்க சமையல்; உள்ளத்தைப் பண்படுத்த சமயம்; மனிதனுக்கு ஆலயமும், கோயிலும், சமயமும் இன்றியமையாதன.

முக்கியமாக நமது நாட்டில் 7744 சிவாலயங்களும், 800 விஷ்ணு ஆலயங்களும் உள்ளன. எல்லாம் பெரிய பெரிய கோயில்கள். பல மாடக் கோயில்கள். சோலை சூழ்ந்த ஆறுகள் சுற்றி வருகின்ற கோயில்களும் பலப்பல.

ஆயினும் அடங்கலுக்குப் பிரீதியான கோயில் ஒன்று தமிழகத்தில்; தஞ்சை மாவட்டத்தில், அறந்தாங்கித் தாலுகாவில் உள்ளது. முடியாத ஒரு காரியத்தை, ''என்ன! ஆவுடையார் கோயில் திருப்பணியோ?'' எனக் கேட்பது வழக்கத்தில் உள்ள பழக்கம். ''ஆவுடையார் கோயில் திருப்பணி அடங்கலுக்குப் பிரீதி'' என்றும் சொல்வார்கள். அவ்வளவு பெரிய கோயில். அத்துணை பெரிய மண்டபங்

கள். கலை நுணுக்கங்களும் கற்பனை வளங்களும் செறிந்த — பொதிந்த தேவாலயம் அது.

மணிவாசகப் பெருமானால், உருவமற்ற, அருவத்யானத்திற்கு ஏற்ப ஆத்மநாதருக்கு மூலஸ்தானமும், அதனைச் சுற்றிய மண்டபமும் மற்றும் பல, மன்னர்களாலும், ஜமீன்தார்களாலும் ஏனைய பல மண்டபங்களும் கட்டப் பெற்றுள்ளன.

ஆவுடையார் கோயிலெனக் கோயிலின் பெயரே அவ் வூருக்கு வழங்கப் பெற்றாலும் திருவாசகத்தில் மணிவாசகர் 'திருப்பெருந்துறை' எனவே பாடியுள்ளார். திருவாசகத்தில் ஓரிடத்திலாவது 'ஆவுடையார் கோயிலென'க் குறிக்கப் பெறவே இல்லை. எனவே மணிவாசகரைப் போலவே நாமும் 'திருப்பெருந்துறை' எனவே கூறுவோம். அம் மூதூர் 'திருப்பெருந்துறை' என வழங்கப் பெறும் காலமும் விரைவில் வரும்.

தெய்வத் திருநெறி பரப்பும் மூதூர்கள் பல. அவற்றில் ஒன்று திருவாதவூர். இவ்வூரில் ஆமாத்திய பிராமண குலத்திலே ஒரு அந்தணருக்கு மணிவாசகர் மகனாகப் பிறந்தார். திருப்பெருந்துறை புராணம் இவரை 'திருநந்தித் தேவர் அவதார'மெனக் கூறுகிறது. ஏனைய புராணங்கள் 'கணநாதர்' எனக் கூறுகின்றன.

இவருடைய அறிவின் செறிவையும், நுண்மாண் நுழை புலனையும் அறிந்த பாண்டியன் இவரை முதலமைச்சராக்கி 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டப் பெயரையும் அளித்து' அமைச்சருக்குரிய அனைத்து மரியாதைகளையும் நல்கினன்.

''காதலித்து அறஞ்செய்வோர்க்கு கவசமும் கண்ணுமாகி
ஏதிலர்க்கு இடும்பையாகி இறைஞ்சினர்க்கு இன்பமாகி
ஆதுலர்க்கு அன்னையாகி அரனடிக்கு அன்புமிக்கார்
பூதலத்து இறைவன் ஆணை பொதுவற நடத்து நாளில்''

என்றபடி இவரோ சிவபிரானிடத்து அன்பு மீதூர்ந்து 'எல்லாம் அவன் செயல்' என்றபடி உலக வாழ்க்கையில் ஒட்டியும், ஒட்டாமலும் 'உன்னருள் பெறுநாள் என்றெ ன்றே' என எண்ணிக்கொண்டே இருந்தார்.

உற்றாரை வேண்டாது, ஊர் வேண்டாது, பேர் வேண் டாது, கற்றாரை வேண்டாது, கற்பனவும் இனியமையும் என்ற கருத்தோடு ''நாதனாகிய தன்னையும் என்னையும் நல்கும், போதனாகிய குருபரன் வருவதெப்போது'' என்ற அவா மிகுந்து அவ்வுணர்விலே திளைத்திருந்தார்.

வேண்டுவோர் வேண்டுவனே ஈவானுடைய அருளி னால் ஒருநாள் குதிரைக் காவலர்கள் மன்னனது அவையினை அணுகி வணங்கி, ''நமது குதிரைகளுக்கு நேர்ந்த நோயி னால் இறந்தன பல. எஞ்சியிருப்பன சில. அவையும் மூப் பும், பிணியும் உடையனவாகவே இருக்கின்றன. ஆதலின் நமது அரசியலில் முறைக்கு வேண்டுங் குதிரைகள் எவ்வ ளவோ அத்துணையும் உடனே வந்தாக வேண்டும்'' என்று கூறினர்.

அதுகேட்ட மன்னரும் அருகிருந்த முதலமைச்சரை நோக்கி, ''வாதவூர் வள்ளால்! நீர் இப்பொழுதே நமது கருவூலத்தைத் திறந்து வேண்டிய பொருள் எடுத்துச்சென்று குதிரைகளை வாங்கி வாரும்'' எனக் கூறினார்.

தென்னவன் பிரமராயனாக விளங்கிய வாதவூரடிகள் வேண்டிய பொருள்களை யானைகள் மீதும், ஒட்டகங்கள் மீதும் ஏற்றி ஏவலாட்களுடன் அனுப்பிவிட்டு. தாம் ஆல வாய் அண்ணலையும், அங்கயற்கண்ணி அம்மையையும் வணங்கிப் புறப்பட்டார்.

திருப்பெருந்துறையை அணுகுகின்ற வேளையிலே நெரு ப்பிலிட்ட வெண்ணெய் போல நெஞ்சு உருகியது. தலையில் உள்ள சுமை இறங்கினாற் போலத் தோன்றியது. ''எனை யாட்கொள்ளும் கருணை வள்ளல் இருக்குமிடம் இதுவேதான்''

என எண்ணி நகரில் புகுந்து நீராடித் திருக்கோயில் வலம் வந்தார். வலம் வரும்போது 'அரஹர' முழக்கம் செவி வழியாகப் புகுந்து சிந்தையை உருக்கிற்று. ஒலி வந்த வழி விரைந்தார். குருந்த மரத்தடியில் குரு மூர்த்தியையும், சீடர்களையும் கண்டார். காந்தத்தைக் கண்ட இரும்புபோல் மனம் அவர் வசமாயிற்று. விரைந்து சென்று அவர் திருவ டியில் வீழ்ந்தார். ஆட்கொண்டருள இறைவன் கருணை யோடு கண்ணேக்கஞ் செய்து கரத்தால் தீண்டித் திருவடி சூட்டிச் சிவஞான உபதேசஞ் செய்தார். ஆதலால் ஆவி யும் உடைமையும் அவர் வசமாயின — இதனைக் கருத் தில் கொண்டுதான் இவர் திருவாசகத்தில் மனமுருக —.

''அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாம்
குன்றே அனையாய் எனையாட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண்
எம்மானே)
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே இதற்கு நாயகமே''

எனப் பாடினர்.

குருவருள் துணைகொண்டு திருவருள் நாடிய வாதவூர டிகள் தாம், குதிரை வாங்கக் கொண்டு வந்த பொருளையெல் லாம் அருளாக மாற்றக் கருதி சிவாலயப் பணியைத் திருப் பெருந்துறையிலே துவங்கினர். நாட்கள் பல கழிந்தன. அருளார் அமுதை வாரியுண்ட வாதவூரருக்கு வேறு நினை வேதும் வரவேயில்லை.

அமைச்சரது அருள் வாழ்வை அரசன் அறிவானு? குதிரை வாங்கச் சென்ற முதலமைச்சரைக் காணேமே என்றும், பொருள் என்னவாயிற்று என்றும் அறிந்து வர ஆளனுப்பினுன். ஏவலாட்கள் சென்று கண்டு வந்து மதிய மைச்சர் நிலையை மன்னர்க்கு எடுத்து உரைத்தனர். மன் னன் சினந்தனன். உடன் வந்து சேர ஆளனுப்பினுன். வாத வூரர் இறைவனிடம் சென்று முறையிட்டார். வேண்டுவோ ருக்கு வேண்டுவன ஈந்திடும் இறைவன் எளிவந்த கருணை

யினால் அமைச்சருக்கு அருள்பாலித்து ''ஆவணி மூல நாளில் குதிரைகள் அனைத்தும் வரும்'' என அருளினார். இதனை அமைச்சர் அரசனிடம் தெரிவித்தார். அரசனும் ஆவணி மூலத்தை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தான்.

அமைச்சர் சொல் பொய்யென ஒற்றர்கள் ஓலமிட்டனர். அமைச்சரைச் சிறையிலிட்டு அரசன் தண்டித்தான். கருணையம்பதியான கடவுள், காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கிப் (குதிரைகளாக்கி) பாண்டியனிடம் ஒப்படைத்தார். அன்றிரவே பரிகள் எல்லாம் நரிகளாயின.

நரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் தாங்காத மன்னன் அடிகளாரைச் சுடுமணலில் கல்லேற்றி நிறுத்திக் கடுந் தண்டனைக்கு ஆளாக்கினான். வாதவூரடிகள் எல்லாவற்றையும் பொறுத்து ஏற்றார். ஆண்டவன் மன்னனது செயலை வெறுத்தான். வைகை ஆற்றில் வெள்ளம் பெருகியது. மதுரையே அழிந்து விடுமோ என்ற அச்சம் சூழ்ந்தது.

அரசன் அவரவரது கரையினை அவரவரே அடைத்துக் கொள்ள வேண்டுமென ஆணையிட்டான். பிட்டு அவித்து விற்கும் 'வந்தி' என்ற மூதாட்டிக்கு அவள் பங்கினை ஏற்று அவளிட்ட பிட்டை உண்டு கரையினை அடைக்க வந்தார். வையை நதியை அடைப்பார் போல வந்து, உண்ட களைப்பால் உறங்கத் தொடங்கினார். ''நூற்றைக்கெடுத்தது குறுணி'' என்பது போல, வந்தியின் பங்கு அடைபடாது, ஊரார் பங்கையும் சேர்த்துக் கரைத்தது. அரசன் சினத்தைச் சிந்தினான். மனிதவுருவில் வந்த மகாதேவனை தன் கைப்பிரம்பு கொண்டு அடித்தான். ஆண்டவன் மேல் பட்ட அடி, அகில சராசரப் பொருட்கள் அனைத்தின் மேலும் பட்டது. இதன் பின்னர் தான் மன்னன் வாதவூரரது பெருமையை உணர்ந்தான். மன்னிப்பு நாடினான். அமைச்சர் பதவியை வாதவூரடிகள் துறந்தார். திருப்பெருந்துறை திருவுத்தரகோசமங்கை, திருவாரூர் திருவிடை மருதூர், தில்லை முதலிய திருத்தலங்களைத் தரிசித்துப் பதிகங்கள் பாடினார்.

ஒருநாள் இறைவன் மறையவர் வடிவங்கொண்டு வாதவூரடிகளை அணுகி, அடிகள் பாடிய திருவாசகம், திருக்கோவையார் இரண்டையும் தாமே தம் கரத்தால் எழுதிக் கைச்சாத்திட்டுக் கனகசபையில் வைத்து மறைந்தார். தில்லை வாழ் அந்தணர்கள் திருவனந்தல் பொழுதில் திருவேட்டைக் கண்டனர். அதில் அம்பலவாணர் கையெழுத்து இருப்பதை அறிந்து வியந்து, திருவாசகம், திருக்கோவையார் எழுதிய மணிவாசகப் பெருந்தகையாகிய வாதவூரடிகளை அணுகி திருவாசகத்திற்குப் பொருள் கூற வேண்டுமென வேண்டினர். அடிகளார் 'அனைத்திற்கும் பொருள் அம்பலவாணர் திருவடிகளே' எனக்கூறி அத்திருவடிகளோடு இரண்டறக் கலந்தனர்.

இவர் திருவாதவூரிலே பிறந்ததால், ஊரின் பெயரால் 'வாதவூரர்' என வழங்கப்பெற்றார். பாண்டி மன்னன் இவரை முதலமைச்சராக்கி 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டப் பெயரைச் சூட்டினான். ஆண்டவனுக்கு மணி மணியாகத் திருவாசகம் பாடியதால் 'மணிவாசகர் என்ற நாமமும் பெற்றார்.

"ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே"

எனத் திருப்பெருந்துறையில் தாம் ஆட்கொண்ட விதத்தைத் திருவாசகத்திலே தெளிவாக்கி நம்மையும் ஆட்கொள்கின்ற காரணத்தால் 'ஆளுடைய அடிகள்' என்ற பெயரும் பெற்றார்.

இவர் ஐந்தெழுத்திலே ஆழப் பதிந்திருந்த காரணத்தாலும் திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே குருமூர்த்தியாய் எழுந்து அருளிய சிவபெருமான் ஐந்தெழுத்தையே உபதேசித்ததாலும். திருவாசகத்திலே எடுத்த எடுப்பிலே, 'நமச்சிவாய வாழ்க' என அடி எடுத்துத் திருப்பெருந்துறையிலே பாடத் தொடங்கினர்.

நமச்சிவாய என்பது இறைவன் பெயர். பெயரை மந்த்ரமாக மாற்றி 'சிவாய நம' எனத் திருவாசகத்தில் திருவேசறவில் பாடுகிறார்.

''நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்தடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே',

'சிவாய நம' மஹாமந்த்ரம் என்பது நமக்குத்தெளிவாகிறது.

''யானேபொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே''

எனத் திருச்சதகத்தில் 'அழுதால் அவனை அடையலாம்' என ஆணித்தரமாக அருளுவதால் 'அழுது அடைந்த அன்பர்' எனவும் இவரைக் கூறலாம்.

''திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்''
என்பது பழமொழி. ஆம். உருகினார் வடலூர் வள்ளலார். வண்ணப்பாக்கள் பல திருவாசகத்திற்கு உரையாக வடித்தார்.

''வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே''

என்றார் வடலூர் அடிகள்; வாதவூரடிகளின் அருள்வாக்கை அள்ளி அள்ளி மாந்தி, அந்த ஆனந்த எக்களிப்பில் இப்படிப் பாடினார்.

திருமுறைகளின் வைப்பு முறையிலே திருவாசகம் எட்டாம் திருமுறையாகும். சிவஞான போதத்தில் எட்டாம் சூத்திரம் குருவருள் மூலமாகத் திருவருள் பெறுவதை உணர்த்துவதாகும்.

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே''

இது சிவஞான போதம் எட்டாம் சூத்திரம்.

''முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறு யார்பெறுவர் அச்சோவே''

இது திருவாசகம். சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்திற்கும், எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்திற்கும் இயைவு படுத்தி உணர்ந்து பார்த்தால் குருவருள் எங்ஙனம் திருவருளைத் தந்து சத்திநிபாதத்தை நிகழ்த்துகிறது என்பது புரியவரும். திருவாசகத்திலே, மூழ்கிவிட்டால் அந்த இன்பக் கடலில் இருந்து எழவே மனம் வராது.

## இனி தொகுப்புரைக்கு வருவோம்:-

திருப்பெருந்துறை, மணிவாசகரை ஈர்த்திழுத்த மிகப் பெரு தலம். மணிவாசகருக்கு என, சன்னதியும் முறைப்படி வழிபாடும் இவருக்கெனவே உற்சவங்களும், திருவீதி உலாக்களும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மணிவாசகர் திருப்பணி செய்து ஆன்மநாதனுக்கு ஆலயம் எடுத்து உருவமற்ற நிலையிலே, அருவத்யானத்திற்கு வழி வகுத்த பெரும்பதி திருப்பெருந்துறை. இம்மாபெரும் ஆலயம் இன்று சிதிலமடைந்து மிகப்பழுதடைந்து திருப்பணிகள் உடனே செய்வதற்குரிய நிலைகளில் இருக்கிறது.

பொருளை அருளாக மாற்றினுல் போகும் ஊருக்குப் புண்ணியம் மிகவுண்டு. மதுரையிலிருந்து சென்னை செல்வோர் வேண்டிய சாமான்களை உடன் எடுத்துச் செல்வர். மதுரையிலிருந்து இலங்கை புறப்படும் போது சாமான்கள் இன்னும் கொஞ்சம் கூடும். மதுரையிலிருந்து மலேசியா

செல்வோருக்கு மேலும் சாமான்கள் மிகும். இடம், பொருள், ஏவல் அறிந்து சாமானம் கூடும். ஆனால் கடைசியாக நாம் போகும் ஊருக்கு எதை எடுத்துச் செல்ல முடியும்; 'காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கு' என்பர் மேலோராகிய நூலோர். எதுவும் வாராது என்பது உண்மைதான். நன்ருகச் சிந்தித்துப் பார்த்தால் ஒன்றுமட்டும் வரும் என்ற உண்மை புலனுகும்.

வாழ்நாளில் நல்லது செய்திருந்தால் புண்ணியம்வரும். அல்லாது செய்திருந்தால் பாவம் வரும். 'பற்றித் தொடரும் இருவினை பாவமும் புண்ணியமுமே' என்பது பெரியோர் வாக்கு. நம்மைத் தொடர்வது புண்ணியமாகவே இருக்கட்டும்.

ஆடிமாத அமாவாசையில் ஒரு அவரை விதையை நடுகிருேம். ஐப்பசி, கார்த்திகையில் அவரைச் செடியிலிருந்து ஆயிரமாயிரம் அவரைக் காய்களைப் பறித்து உண்கிருேம். ஒன்று ஆயிரமாகிறது. இடமறிந்து தர்மம் செய்தால் அதுவும் ஒன்றுக்கு ஆயிரம் புண்ணியமாகத் திரும்புகிறது.

தர்மம் செய்கிறேன் என்ற பெயரால், அடைமழைக் காலத்தில் - அதாவது ஐப்பசி மாதத்தில் - ஆற்றங்கரை ஓரத்தில் தண்ணீர்ப் பந்தல் வைத்தால் யார் தண்ணீர் பருக வருவார்கள்?

தர்மம் என்று, கோடை காலத்தில், நா வரளும் வேளையில் சாலைக்கு வெகு தூரம் அப்பால். ஒரு பெரிய மலையின் மேல் தண்ணீர்ப் பந்தல் வைத்தால் வரண்டு உலர்ந்து ஒட்டிய நாவிற்கு உடனுக தாகம் தணிவிக்கப் பயனுமோ?

சாந்திபெற நினைக்கும் சமுதாயமே! இக்கோயில்த் திருப்பணி முற்றுப்பெற 25 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது.

ஒரு ரூபாயிலிருந்து ஒரு லட்சம், பல லட்சங்கள் வரை திருப்பெருந்துறைத் திருப்பணிக்கு அள்ளி வழங்கி தர்மத்தை இடமறிந்து செய்து ஏற்ற புண்ணியத்தைத்தேடிக் கொள்ள விரைந்து வாரீர்! இத்திருப்பணிக்கு எவ்வளவு தந்தாலும் அத்தொகைக்கு வரிவிலக்கு இந்திய அரசாங்கம் அளித்துள்ளது. ஒரு லட்சமும் அதற்கு மேலும் தருவோருக்கு திருக்கோயிலில் தனித்த கல்வெட்டும், ஆயிரக் கணக்கில் அளிப்போருக்கு தொடர் கல்வெட்டில் இடமும் நிலை பெறும். தருமத்திற்கு முந்துங்கள்; நிலைத்த பெயரை நிலை நாட்டுங்கள்.

**'நிதி மிகுந்தவர் பொற்குவையும்**
**நிதி குறைந்தவர் காசுகளும்**
**அதுவும் அற்றவர்கள் வாய்ச்சொல்லும்**
**அருள்வீர்!'**

அனுப்ப வேண்டிய முகவரி:-

**திரு. ச. முத்துக்குமாரசாமி சேர்வைக்காரர்,**
பொருளாளர்
திருப்பணிக்குழு,
ஆவுடையார் கோவில்,
அறந்தாங்கி வட்டம்,
தஞ்சை மாவட்டம்,
தமிழ்நாடு.

---

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

**—மணிவாசகர்**

# மறப்பதெப்படி?

## [சுவாமி இராமானந்தா]

(சிவானந்த நகரம் — இமயம்)

உலகில் உள்ள அனைவரும் நல்ல நினைவாற்றல் உடையவர்களாக இருக்க வேண்டுமென்று எல்லாரும் விழையும் போது மறத்தலைப் பற்றி ஏன் பேச வேண்டும் என்ற வினு வெழக் கூடும். நாம் நினைவிலிருத்த வேண்டியவற்றை நினைவிலிருத்த வேண்டும்; மறக்க வேண்டியவற்றை மறக்க வேண்டுமென்பதே இதற்கு விடையாகும். நல்லன அனைத்தும் நினைவிலிருக்க வேண்டும்; தீயன அனைத்தும் மறக்கப் பட வேண்டும். நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணுனந்த பரமன் நினைவிலிருக்க வேண்டும், இந்த மாய உலகம் மறக்கப்பட வேண்டும். உயிரின் குரல் (அந்தர்யாமி) நினைவிலிருக்க வேண்டும். உடலுணர்ச்சி போன்றவை மறக்கப்பட வேண்டும். ஆத்மா நினைவிலிருக்க வேண்டும்; ஆத்மாவல்லாதவை மறக்கப்பட வேண்டும். சத்து — சித்து — ஆனந்தம் நினைவிலிருக்க வேண்டும். அனுருதம் — ஜடம் — துக்கம் ஆகிய வஸ்துக்கள் மறக்கப்பட வேண்டும். நன்மையானவற்றை (ஸ்ரேயஸ்) நினைவில் கொள்ள வேண்டும். வெறும் உடலின்பம் தரக்கூடியவற்றை மறக்க வேண்டும். இவ்வாறு நினைவிருக்க வேண்டியவை மறக்க வேண்டியவையினின்று முற்றிலும் வேறுபடுகிறது.

''மறப்பீர்! மன்னிப்பீர்!!'' ஆணையிட்டார் இயேசுபிரான். நமக்குச் செய்யப்பட்ட தீமையை மறந்து அத்தீமை செய்தவரை மன்னிக்க வேண்டும் என்பதே இந்த ஆணையின் பொருளாகும். ''நமக்குச் செய்யப்பட்ட தீங்கின் அளவு எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதனை உடனடியாக மறந்து அத் துன்பத்தை உண்டாக்கியவரை மன்னிக்க வேண்டும்; அதேநேரத்தில் நமக்கு மிகச் சிறிய நன்மை

செய்யப்பட்டிருந்தாலும் அதனை நினைவில் கொண்டு அந் நன்மை செய்தவரிடம் எப்பொழுதும் நன்றியுடனிருக்க வேண்டும்'' என்று நீதிசாத்திரங்கள் கூறுகின்றன. நாம் மற்றவர்களிடம் உள்ள நல்லனவற்றைப் பாராட்டி, அல்ல னவற்றை ஒதுக்கித்தள்ள வேண்டும். தீமையைப் பாராதே! நன்மையை மட்டும் பார்!

நுட்பமான நோக்குடையவன் ஒரு பொருளை அது இருப்பது போலவே பார்க்கிறான். தீயதைப் பாராததோ அல்லது அதனை நன்மையாகக் கருதிப் பார்ப்பதோ பார் வையின் சரியான கோணமல்ல. அப்படியாயின், ''தீய தைப் பாராதே; நன்மையை மட்டும் பார்'' என்னும் அறி வுரைக்கு என்ன பொருள்?

''நன்றுடையானை தீயதில்லானை'' என்று கடவுளைப் பற்றித் தமிழ்ப் பெரியார் சம்பந்தர் பாடியிருக்கிறார். கட வுள் மட்டுமே சற்றும் தீமை கலப்பில்லாத நன்மையனைத் தும் உடையவராயிருக்கிறார். நாம் பார்க்கின்ற உலகம் — நன்மையுடையதானாலும், தீமையுடையதானாலும் கட வுளே. எடுத்துக் காட்டாக நாம் ஒரு கனவைப் பற்றி எடுத்துக் கொள்வோம். அந்தக் கனவில் எப்படிப்பட்ட காட்சிகள் அல்லது மனிதர்கள் அல்லது அநுபவங்கள் தோன் றினாலும் அவையெல்லாம் உண்மையில் கனவுகாண்பவனே! அவனுடைய மனமே! வேறு யாரும் அல்லது எதுவும் கிஞ் சித்தேனும் நிலைத்திருப்பதில்லை. விழித்து எழும்போதும் (ஜாக்கிரமும்) இதே நிலைதான். இதனையே சாத்திரங்கள் திவா ஸ்வப்னம் (பகற்கனவு) தீர்க்க ஸ்வப்னம் (நீண்ட கனவு) என்று குறிப்பிடுகின்றன. இங்கு முற்றிலும் கட வுளேயல்லாது வேறேதுமில்லை.

''ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜெகத்யாம் ஜெகத்
தேன தய்க்தேன புஞ்சீதா மாக்ருத கஸ்ய ஸ்வித்தனம்!''

''இந்த உலகில் உள்ள அனைத்தின் உள்ளிலும் புறத்தி லும் நிச்சயம் கடவுள் வியாபித்திருக்கிறார். எனவே துறந்த

வற்றில் பற்றுக் கொள்ளுங்கள்; மற்றவர் செல்வத்தை அப கரிக்காதீர்கள்'' என்று ஈஸ்வராஸ்ய உபநிடதத்தின் முதல் மந்திரம் கட்டளையிடுகிறது. எனவே போலியான பெயர்களை யும் உருவங்களையும் கைவிட்டு, அஸ்தி — பாதி — ப்ரியம் (சத்து - சித்து - ஆனந்தம்) ஆகியவற்றை அடைவது உண் மையில் தீயதைப் பாராமல் நன்மையைமட்டும் பார்ப்பதற் காகவேயாம்!

நாம் இப்பொழுது மறத்தலைப்பற்றி நினைவு கூர்வோம். எது மறக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே விளக்கப் பட்டிருக்கிறது. நமக்குச் செய்யப்பட்ட தீங்கு மறக்கப்பட வேண்டும். ''இராமன் எனக்கு ஒரு தவறு செய்தான். கடைத் தெருவில் அவன் என்னைக் கண்டித்தான். நான் நிர பராதியாயிருந்தும் என்னை அவன் அடித்தான். இராமன் எனக்குச் செய்த துன்பத்தை மறக்கவேண்டும். இராமனின் தவறை நான் மறந்துவிட வேண்டும்.'' இவ்வாறு அதனைப் பற்றியே எண்ணுவதால் அந்த நினைவு உண்மையில் மேலும் மேலும் வலுவடையத்தான் செய்கிறது. மனம் அல்லது உணர்வுகளால் எப்படிப்பட்டது. கிரகிக்கப்பட்டாலும் அது ஒரு நுட்பமான மன உணர்வை உண்டாக்குகிறது. (சம்ஸ் காரம்)

திரும்பத் திரும்ப உள்ள அனுபவத்துடன் இந்த சம்ஸ் காரங்கள் மேலும் மேலும் வலுவடைகின்றன. ஆத்மஞா னம் என்னும் ரப்பரைத் தவிர வேறு எதனுலும் இதனை அழிக்க முடியாது. ஒரு மருத்துவர் ஒரு சமயம் நோயாளி ஒருவனுக்குக் குரங்கைப்பற்றி நினைக்காமல் மருந்து சாப் பிடும்படி கூறி மருந்தைத் தந்தார். ஆனுல் எப்பொழுது நோயாளி மருந்தை எடுத்தாலும் குரங்கு பற்றிய நினைவே மனத்தில் விசுவரூபமெடுத்தது. இது போன்றே நமக்குச் செய்யப்பட்ட துன்பத்தை மறக்க முயற்சி செய்வது அதனை மேலும் மேலும் வலிமைப்படுத்தவே செய்கிறது. ஆனுல் மறக்கவேண்டும் என்பது இயேசுபிரானின் கட்டளையல்ல வா? ஆம். அது வீணனதாக இருக்க முடியுமா? இல்லை;

ஒருபோதும் இருக்க முடியாது. அப்படியானால் இந்த கட்டளையின் நோக்கம்தான் என்ன? அந்த கட்டளையின் பொருளை நாம் எந்த வழியில் புரிந்து கொள்ளுகிறோம் என்பதில் அந்நோக்கம் நிறைந்துள்ளது.

'நமக்கு இழைக்கப்பட்ட தீங்கை மறக்கவேண்டும்' என்னும் இயேசுபிரானின் கட்டளையில் முக்கியமானதும் மேன்மையானதுமான நோக்கம் ஒன்று உள்ளது. நமக்குச் சரியான வாய்ப்பு கிடைத்தாலும் நமக்குச் செய்யப்பட்ட துன்பத்திற்காக பழிவாங்கக் கூடாது. பழிவாங்குதலைப்பற்றிய எண்ணமோ அல்லது துன்பம் செய்தவனுக்கு மிகச் சிறிய துன்பம் செய்வதோ நம்முடைய மனத்தில் தோன்றவும் விடக்கூடாது. நம்மை வருத்திய துன்பங்களுக்காக அதற்குக் காரணமானவன் என்று நாம் கருதுகின்றவன் மீது எந்த வகையிலும் பழிவாங்கக் கூடாது. அதற்குப் பதிலாக உண்மையுடன் அவனுக்கு நன்மை செய்ய முயலவேண்டும்.

''தீமைக்கு நன்மை செய்'' என்று போதித்து அதனை நடைமுறையில் கையாண்ட புத்தபிரானை நாம் பின்பற்ற வேண்டும்.

வேறெவரும் மற்றவரின் இன்பதுன்பத்திற்குக் காரணமாக இருக்க முடியாது. தீதும் நன்றும் பிறர் தரவாரா. வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான். நம்முடைய சொந்த செயல்களின் பலாபலன்களையே நாம் அடைகிறோம். இது கடவுளின் மீறமுடியாத சட்டமாகும்'

''கர்மத்தின் பாதை புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு நுட்பமும் ஆழமும் உடையது'' (கஹனு கருமணோகதி கீதை 4-17)

ஆதலால் நமக்கு எந்த கர்மத்தின் பலாபலன் எப்பொழுது எந்தசமயத்தில் எப்படிவரும் என்று ஒருபோதும் புரிந்து

கொள்ள இயலாது. கடவுளின் சட்டம் இரகசியமாய் அற்புதமாய் வேலை செய்கிறது. நாம் செய்யாத தீய செயல்களுக்காக ஒரு போதும் துன்பம் அனுபவிக்கமாட்டோம். எனவே பிறர்தான் நமது துன்பத்திற்குக் காரணம் என்று கருதி மற்றவர் மீது கோபப்படுவதால் என்ன பலன்?

நமக்குத் தீங்கு செய்பவன் உருவில் தோன்றுபவரும் அதே கடவுள்தான். அவர் உயர்ந்த கருணையும் அளவிடமுடியாத அன்பும் உடையவர். அவர் அடையாதது — அடைய வேண்டியதாக ஏதுமில்லை.

''நான வாப்பமாவாப்தவ்யம்'' கீதை 3—22

எனவே அவர் எதைச் செய்தாலும் அது நம்முடைய உயர்ந்த நன்மைக்காக மட்டுமே இருக்கும் (ஸ்ரேயஸ்). நம்முடைய தீய செயல்களின் பலனை அனுபவத்தால் கழிப்பதற்காகவும் நம்மை நன்மையின் பாதையில் நடத்திச் செல்வதற்காகவுமே, கடவுள் தீச் செயல் செய்பவன் உருவில் நமக்குத் துன்பம் தருகிறார். நம்முடைய மனம் கோபப்படும் விஷயங்களிலும், அனுகூலமற்ற சூழ்நிலைகளிலும் மிகுதியான துன்பங்களிலும் எவ்வாறு நடந்துகொள்கிறது— அது பதை பதைக்கிறதா அல்லது அமைதியாக இருக்கிறதா — நாம் அவரை நினைவில் வைத்திருக்கிறோமா அல்லது மறந்துவிடுகிறோமா என்றே கடவுள் நமக்குத் துன்பம் தந்து நம்மைப் பரிசோதிக்கிறார்.

நாம் அந்த சோதனைகளில் வெற்றிபெறவேண்டும். நம்முடைய துன்பங்களிலிருந்து நாம் கற்கவேண்டிய முறையான பாடங்களில் கற்று ஆன்மீகப்பாதையில் முன்னேற வேண்டியது நம்முடைய கடமையாகும். நம்முடைய முன்னேற்றத்திற்காகப் பாடங்களைப் போதிக்கிறவர் நம்முடைய குருவே. அவர் எப்பொழுதும் பூஜிக்கத் தகுந்தவர். இந்த கண்ணோட்டத்தில் — நமக்குக் கெடுதல் செய்பவரின் உருவில் நமக்குப் போதனை புரியும் கடவுளைக்கண்டால் நாம் உண்மை

யில் நமக்குச் செய்யப்பட்ட தீமையை மறக்கின்றவரா வோம். இயேசுபிரானின் கட்டளையின் இரகசியம் இதுவே.

நாம் எல்லாவற்றிலும் இறைவனைக் காண முயலுவோமானல் நமக்குக் கீழ்க்கண்ட நன்மைகள் ஏற்படுகின்றன.

1. வெறுப்பும் கோபமும் அழிந்தொழியும்.
2. அன்பும் விசுவாசமும் வளர்ந்தோங்கும்.
3. தீமையைப் பார்ப்பது விலகும்.
4. நன்மையைப் பார்ப்பது மட்டுமே நீடித்திருக்கும்.
5. உலகம் தன்னுடைய உலக இயற்கையை இழந்துவிடும்; உண்மையான தெய்வீகத் தன்மை மட்டுமே தென்படும்.
6. எல்லாத் துன்பங்களும் நீங்கி இணக்கமின்மை மறையும்; நன்மையும் நேசபாவமும் பெருகி பேரானந்தம் கிட்டும்.
7. கடவுளைப்பற்றிய நிலையான நினைவுக்கு வழிகோலி அதன் மூலம் கடவுளை அல்லது ஆத்மாவினை உணர்வதற்கு வழி காட்டும்.

நாம் எல்லாம்வல்ல இறைவனிடம் எல்லாருக்கும் நற்சிந்தையை அளித்து வாழ்வின் உயர்ந்த இலட்சியமான சத்து — சித்து — ஆனந்தத்தை அடைய ஆசீர்வதிக்கும்படி சிரத்தையுடன் இடையருது வழிபடுவோமாக!

ஹரி ஓம் தத்சத்!

---

நீ சம்பாதிக்கும் வரையில்தான் சுற்றத்தார் உன்மீது பரிவு காட்டுவர். வளம் குன்றியதும் உன்னை ஏனென்று கேட்போர் அரிதாய்விடுவர்.

உன் உடலில் மூச்சுள்ள வரையில்தான் உனக்கு உபசாரம் நடக்கும். கடைசி மூச்சு விட்டதும், உன் மனைவியும் உன் சடலத்தைக் கண்டு அஞ்சுவாள்.

— சங்கரர் பொன்மொழிகள்

# சென்னை தாம்பரம் அடியார் கோஷ்டியினர் ஈழநாட்டில் திருத்தல யாத்திரை

சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றம் தாம்பரம் கிளையின் அடியார்கள் 84 பேர் மே மாதம் 1-ம் திகதி தொடக்கம் 12-ம் திகதி வரை ஈழநாட்டில் திருத்தல யாத்திரை செய்தார்கள். வட ஆற்காடு ஸ்ரீ இரத்தினகிரி சுவாமிகள், அருள் மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார், சென்னை அடியார் திருக்கூட்டமன்ற ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ முத்துசாமி ஐயர், அதன் நிர்வாகஸ்தர் டாக்டர் பி. எஸ். சி. மணி ஆகியோரின் நல்லாசிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த யாத்திரைக் கோஷ்டிக்கு செ. அ. தி. இ. ப. ம. தாம்பரம் கிளையின் தலைவர் திரு. த. ஏகாம்பரம் அவர்கள் தலைமைதாங்கினர்.

இக்கோஷ்டியில் சாது ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள், தாம்பரம் கிளை திருப்புகழ் போதகாசிரியர் சங்கீத வித்துவான் ஸ்ரீரங்கம் இசைச்சுடர் திரு. டி. ஆர். கண்ணன், பாலபாரதி — கலைச்செல்வி. குமாரி. என். உமாசரஸ்வதி, மிருதங்க வித்துவான் 'லயஞான பூஷண' சிக்கல் ஆர். வடிவேல் அவர்களும் திருப்புகழ் சபை மாணவ மாணவிகளும் பங்குபற்றினர்கள்.

இக் கோஷ்டியினர் இலங்கையில் சென்றவிடமெல்லாம் பக்திபூர்வமான பெருவரவேற்பு அளித்து பக்தி இன்னிசை பஜனை, சொற்பொழிவுகள் முதலானவற்றை பயனுற அனுபவித்தனர்.

ஈழநாட்டு திருத்தல யாத்திரைக்கான ஒழுங்குகளை நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினர் ஏற்பாடு செய்தனர்.

# அக்கம்மாவின் அகவாழ்வு

(குரு, ஆ. கந்தசாமி ஐயா)

அகவாழ்வு உண்மை வாழ்வு எனப்படும். அகவாழ்வு என்ருல் நானுர் என்னும் விஞ எழுந்து பிறகு ஆராய்ந்து பகுத்துக்காண்பது. முதலில் தன் இயல்பைத் தான் குறித்துக் கொள்ளாதவன் இரண்டாவதொன்றை அறிய வல்லனே? அதனுலேதான் நம் முன்னேர்கள் தன் இயல்பைத் தெரிந்து கொள்ளத் தன் அகவாழ்வில் அதிகம் உழைத்தனர். கிரேக்கருங்கூட உன்னைத் தெரிந்துகொள் என்று மொழிவர்.

நான் என்பதற்குச் சடமாகிய உலகமோ ஐம்பூதகாரிய மாகிய உடம்போ, மனம் முதலிய கரணங்களோ ஆகமாட்டா. இவைகளிலெல்லாம் வியாபித்திருக்கும் இவைகளுக்கு அப்பாற்பட்ட நித்திய பரிபூர்ண சைதன்யமே நான் என் பதை அறிய முயன்று பாடுபட்டு உழைத்து அதற்காக வாழும் வாழ்க்கையே அத்யாத்மீக வாழ்க்கை. அதுவே கேடில்லாத வாழ்வு. அந்த உயர்ந்த வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தவர்களுக்கு துக்கம் துயரம் இருவினை துவந்துவங்கள் அணுகாது. ஐம்பூதமாகிய உடம்பைப்பற்றிய மோகம் மறைந்துபோம். விஷயசுகங்கள் விஷத்தன்மையாகத் தோன்றும். ஏனென்ருல் அத்யாத்மீக நிலையுற்ற சீவன் விரும்புவது ஆத்மசுகம் ஒன்றே. அதற்குத் தன்முன்னிலையில் தோன்றும் விஷயசுகம் தேவாமிருதத்தின் முன் சிறு நெல்லிக்கனி போன்றதே. உள்ளத்தில் ஆத்மானந்தத்தின் நிலை நன்ருகப் பதிந்துவிட்டதென்ருல் உலகில் காணப்படும் விஷயசுகங்களுக்கு ஒரு சிறிதும் வாய் நீர் சுரக்கமாட்டா. மாயையின் வலிய செயலுக்கு மயங்கார். உடம்பின் வேதனைக்கு மனம் நோகான். இது குறித்து அக்கம்மா அவர்கள்,

"அமேத்யஹடிகே மலமூத்ரதகுடிகே எலுவினதடிக்கே
சுடலீதேஹ ஒடலவிடிது கெடதிரு சன்னமல்லிகார்ஜு
னனறிமருளே"

என்றருளுகின்றார்கள்.

அகவாழ்வில் அடியெடுத்து வைப்பவர், சத்பத்தி சமயக்ஞானம், சத்கிரியைகளினால் சாந்தனாய் திகழ்வர். மயில், கார் முகிலின் முழக்கங்கண்டு ஆனந்தங்கொள்வது போல் லிங்கானுபவத்திற்குச் செவி கொடுப்பர். குயில்கள் மாந்தளிர்களுக்கு வாய்திறப்பது போல் சிவப்பிரகாசத்திற்கு வாய் திறப்பர். வண்டுகள் மலரின்மகரந்தத்தை நுகர்வது போல் லிங்காற்பிதமான இனிய மணத்தையே முகர்வர். அதிகமேன் அவர் இந்திரிய விவகாரங்களெல்லாம் அந்த ஆத்மாவில் தோன்றி அந்த ஆத்மனே தானாகின்றான். அதுவே அகவாழ்க்கை. அப்படிப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் அக்கம்மாஅவர்கள்.

---

பாலன் விளையாட்டில் கருத்து செலுத்துகிறான்; இளைஞன் காதல் லீலைகள் புரிகிறான்; கிழவன் குடும்பக் கவலையில் ஆழ்கிறான்; எவரும் மெய்ப் பொருளின் மீது சிறிதும் நாட்டங்கொள்வதில்லை.

உன் மனைவி யார்? உன் மகன் யார்? நீதான் யார்? எங்கிருந்து வந்தாய்? இவ்வுலக வாழ்க்கையே ஒரு விசித்திரம். இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் உன் மயக்கம் தெளியும். அப்போது இந்த உன் ஜீவாத்மா பரமாத்மாவே என்பதை உணர்வாய்.

நல்லோர் உறவின் பயனாகப் பொருள்களின் மீதுள்ள பற்று போம். பற்று குறையக் குறைய மயக்கம் தெளியும். மயக்கம் தீர்ந்தால் சஞ்சல சித்தம் அமைதியுறும். அந்தநிலையில், ஜீவன் உயிருடனிருக்கும் போதே விடுதலைப் பேறு அடைகின்றது. —சங்கரர் பொன்மொழிகள்

# இயற்கையே சோதிடம்

ச. இ. அப்புத்துரை (J. P.) சோதிடன்-வெள்ளவத்தை

## வான சாஸ்திரம் பாடம் - 20.
(அயனும்சத்தோடு)

## இராகு கேதுக்கள்

வானசாஸ்திரத்தில் ராகு கேதுக்களை விரிவாகச் சொல்லாமல், பூமி, சந்திரனின் பாதைகளில் இருதானங்கள் என்று சொல்லிவிட்டார்கள்.

இங்கே பூகோளத்தில் பிரதான கோள்களாக ராகு கேதுக்களே, பலன்களைக் காட்டுகின்றன. ஆரம்ப பாடங்களில், நவவாயில்களே நவக்கிரகங்கள் என்ற தலைப்பில், சலவாசல் ராகுவாகவும், மலவாசல் கேதுவாகவும் கூறப்பட்டுள்ளது.

பூமியின் சாயலான ராகு இரவினம் சமாகவும், சந்திரனின் சாயலான நிலாவே கேதுவினம் சமாகவும் வைத்து எங்கள் 20-ம் பாடத்தை ஆரம்பிப்போம். இந்த ராகு கேதுக்களான, இராவும், நிலாவின் சங்கமங்களினலேயே இயற்கையாகிய, இம்மாயை உலகம் இயங்குகிறது.

உதாரணமாக, அசையும் படத்திரையின்மீது காணப்படும், பற்பல பொருள்களும் எதனுல் ஆக்கப்பட்டுள்ளன? அவையனைத்தும் ஒளியால் ஆக்கப்பட்டுள்ளன. படத்திரையின்மீது நாம் காணும் நீர், தீ, நிலம், அசையும் செடிகள், ஓடுங்கருவிகள் உயிருள்ள பொருள்கள் முதலிய யாவும் ஒளியால் ஒளியொன்றுலே ஆக்கப்பட்டுள்ளன. ஒளியும்அதனின்றும் வேறுபட்ட இருளும், (இருள்ராகு ஒளி கேது) அதாவது,

ஒளியின்மையும், முழுமாயத்தையும் தோற்றுவிக்கின்றன. அசையும் படக்கருவியில் பட ஏட்டிற்கும் பின்னுள்ள ஒளியோ வடிவற்ற ஒரே பிரகாசப் பெருக்கேயாகும். பட ஏடு அங்கு இல்லாவிடின், ஒரு தன்மையான பிரகாசம் வாய்ந்த திரையையன்றி வேறொன்றையும் காணமாட்டோம். பட ஏட்டை நீக்கிவிடும்போது நாம் உண்மையாகப் பார்ப்பதும் அதுவன்றோ? ஒளி தாராளமாகச் செல்வதற்குப் பட ஏடு இடந்தருவதில்லை. சில பகுதிகட்குச் செல்ல இடந்தந்து மற்றப்பகுதிகளைத் தடுத்துவிடுகிறது. பட ஏட்டில், ஏற்படும் இத்தடையே இருட்பகுதிகட்குக் காரணமாகிறது. ''மாயையாகிய இருள், ஞானமாகிய ஒளியை மறைக்கிறது''

இவ் இருட்பகுதிகளின் வரையறைக்கு உட்பட்டுத் திரையின்மீது விழும் ஒளி ஏராளமான பலவகைப்பட்ட பொருள்களாகத் தோன்றுகிறது. மேலும் திரையின்மீது விழும் படங்களின் அசைவாகிய மாயம் ஒளியின் அசைவு காரணமாக எழுவதேயன்று. பட ஏட்டின் அசைவால் உண்டாகும் இருட்பகுதிகளின் புதிய ஒழுங்கு வகையால் மட்டும் அதுஏற்படுகிறது. பட ஏடு அசையும்போது, அதன் வழியாகப் பாயும் ஒளிக்கும் புதுப்புது வழிகளில் தடை ஏற்படுகின்றன. ஒளி ஒரேமாதிரியாய் உள்ளது. (கலரொளி வர்ணஜாலம்) இருட்பகுதிகள் காணுந்தோறும் மாறி வருகின்றன; படத் திரையின்மீது காட்சிகள் அசைவதாகத் தோன்றும் பொய்க் காட்சிக்கு ஏது இவ்வளவேயன்றி வேறொன்றி, வேறில்லை.

இவ்வுலகப் பொய்க்காட்சியும் கிட்டத்தட்ட இதுபோன்றே உருவாக்கப்படுகின்றது.

ஈசன் அசையும் படக்கருவியின் ஒளியைப் போன்றுள்ளான். ஞானகாரகன் கேது ஒளிமயமானவன், சந்திரன் நிலாவொளியில் ஞானவான்களுக்கு (ஆன்மாவோடு) பசுபதி வடிவாகி பக்தி பரவசத்தையே யூட்டும்.

மாயை அசையும் பட ஏட்டைப் போன்றது. இருள், போக காரகன் ராகு மாயையாகிய இந்த உலக சிற்றின்ப

வாழ்வை போதை பொருள்களாகப் போதிக்கிறது. மாயை வழியாக நோக்கும்போது, ஈசன் நாம உருவங்களாகிய எண்ணிறந்த இருட் பகுதிகளால் பல்வகைப்படுவது போல வும், தூலப் பொருளாவது போலவும் தோற்றுகிறுன்; ஆனுல் உண்மையில் ஈசன் யாதொரு மாறுபாடும் அடை வதில்லே. அசையும் பட உவமையில் படத்திரையே, ஒளி மயமாயிருப்பின், அதற்குள்ளேயே இருட்பகுதிகளால் தன் னேப் பலவாருக, வேறுபடுத்திக் கொள்ளும் தன்மை இருந் திருப்பின் உவமை முற்றிலும் பொருத்தமானதாகும். ஏனெனில் ஈசன் தன்னேயே ஆதாரப் பொருளாகக்கொண்டு தனது சக்தியாகிய மாயையால் தன்மீதே பிரபஞ்சமெனும் பொய்க் காட்சியைத் தோற்றுவிக்கிறுன். மாயை ஈசனது உண்மையை மறைத்து, ஈசனேயே இவ்வுலகமாகத் தோற் றுவிக்கிறது.

நாம உருவங் களில் வரம்பு கடந்த பல வகைகளே உண்டாக்குவதிஞலே இது எளிதாக நிகழ்கின்றது. படத் திரையிலுள்ள இருட் பகுதிகளேப் போன்றே நாம உருவங்களும் பொருளல்ல!

இந்த ராவாகிய ராகுவும் நிலாவாகிய கேதுவுங் கூடி உலகமனேத்தையும் வர்ணஜாலப் படத்திரைக்கு ஒப்பிடு வதைச் சூரிய சந்திர கிரகணத்தாலுமுணர்த்துகிறது.

பூமியின் சாயலே சந்திரனே மறைப்பதால் சந்திர கிர கணமென்றும் சந்திரனே அமாவாசைத் திதியில் சூரியன் சந்திரன் பூமி நிரையில் வரும்போது சூரிய கிரகணம் வரும் என்று வான சாஸ்திரிகள் கூறுகிறுர்கள். அப்படியாயின் ராகு கேதுவோடு சூரிய சந்திரர் கூடாத காலங்களில் ஒவ் வொரு மாதமும் சூரியசந்திர கிரகணம் வரலாந்தானே? சூரிய சந்திரர் ராகு கேதுக்களுடன் கூடும்போது மட்டும் தான் கிரகணங்கள் ஏற்படும். சென்ற பாட்டத்தில் சந்திரன் ஐந்து பாகை சரிவாய் ஓடுவதிஞல் ஒவ்வொரு மாதமும் கிரகணம் வருவதில்லே என்பது வானசாஸ்திரிகள் கொள் கையாகும்.

ராகு கேதுக்கள் அண்டநாயகனின் அடிமுடி போன்ற இரு சுடர்களெனலாம். நாம் வசிக்கும் பூமியை ஆயிரம் பணமகுடங்களையுடைய ஆதிசேடன் தாங்கி நிற்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. அதன் தத்துவ மிதுவே! பூமியிலுள்ள மலைகளனைத்தும் ஆதிஷேசனின் தலைகளாகவும் பூமியின் சாயலாகிய நீளமான சாயலே ஆதிஷேசனின் வாலாகவும் இந்து மத இருடிகட்குத் தோற்றப்பட்டதேயாகும். மறை என்பது வேதம், எல்லாம் புதை பொருளாக வைக்கப்பட்டிருப்பது, மக்களின் சிந்தனு சக்தியை வளர்க்கவே முனிவர்கள் புராணங்களைப் படைத்தனர். ஓர் மலையை நாம் தூரத்திலிருந்து பார்ப்போமாயின் பனிப்புகார் படிந்த பாம்பின் படம் போற் தோற்றமளிப்பதைக் காணலாம். இப் பாம்பின் சிகரத்தில் நந்தகோபாலன் திருநடனஞ் செய்வதை கற்பனை பண்ணிப் பாருங்கள்!

---

காலன் நெருங்குகிறுன். நீ பயின்ற கலைகளும் ஓயாமல் செய்துவரும் வியாகரண சாத்திர ஆராய்ச்சிகளும் உன்னைப் பாதுகாக்குமென நினைத்தால் நீ மூடனேயாவாய். கோவிந்தனிடம் அன்பு செலுத்தி அவனை வழிபடு. யமனின் பாசக்கயிற்றினின்று தப்ப இதுவே வழி.

பொருளின் மீதுள்ள பேராசையை விடு. உழைப்பால் அடைந்ததை வைத்துக் கொண்டு திருப்தியடைவாயாக.

பெண்ணின் உடலழகைக் கண்டு மதி கலங்காதே. அழகிய உடலானது இறுதியில் அழியும் சதைதானே என்பதை அடிக்கடி யோசித்துப் பார்! புலன்களை அடக்கு. உலகப் பற்றை விடு.

நோயும் 'நான்' என்ற அகந்தையும் ஆட்சி செலுத்தும் இவ்வுலகம் சோகமயமானது; தாமரை இலை மீதுள்ள நீர்த் துளிபோல நிலையற்றது. இதனை உணர்வாயாக.

-சங்கரர் பொன்மொழிகள்

# பெருவெளி!

(புதுவை - இரா. வெங்கடேசன்)
(இயலிசைப்புலவர்)

மேவுபொருட் கெல்லாம் வெளியிலிருந்து செம்பரிதி
பூவுலகம் விண்மீன் பொலிமதியம்—யாவும்
வெளிப்படுத்தி நிற்குமொரு வெற்றிடமா முன்னே
வெளியென்று விண்டார் விரைந்து.

★ ★

நிலமென்றும் தீயென்றும் நீரென்றும் வீசும்
வளியென்றும் உன்றன் வயிற்றில்—வலம்வந்து
தானியங்கும் பேரெழிலைத் தாரணியுள் ளோர்கண்டு
வானியங்குங் கோள்களென்றார் மன்.

★ ★

உன்னுள்ளே நான்கும் ஒடுங்கு நிலைகண்டும்
உன்னையும் ஐந்திலொன்றா யுன்னியதேன்—எண்ணமும்
ஓமென் ஒலியும் ஒளியும் உறைகின்ற
சோமத் திருவேநீ சொல்.

★ ★

உன்னை நினைத்தாலோ ஒன்றுமில்லை! என்றாலும்
உன்னிடத்தில் இல்லாத தொன்றுமில்லை!—என்னே
புரிந்துகொள்ள வொண்ணுப் புதுமை! இதனைத்
தெரிந்துகொள்ள ஓர்வழிநீ செப்பு!

★ ★

கண்ணுக்கு மெட்டாய்! கருத்துக்கும் நீஎட்டாய்!
பண்ணுக்கு நீயும் பதிலுரைப்பாய்!—அண்ணுந்தாய்!
வண்ணங்கள் நூறு வகைவகையாய்க் காட்டிடுவாய்!
எண்ணமெலாம் இன்பம் எழும்.

★ ★

கொள்ளும் சுனைநீர்வீழ் குன்றும், அழற்பிழம்பை
அள்ளித் தெளிக்கும் அனல்மலையும்—வில்ளரிய
மாக்கடலும் மக்களோடு மாக்களுஞ்சூழ் நீணிலமுன்
மாக்குடலுள் வாழ்வதன்றோ சொல்.

★ ★

கோளியக்கம் காலங் குறிக்கு மெனத்தெரிந்து
நாளியக்கங் கண்டுரைத்த நானிலத்தார்—நீளியக்கம்
எல்லாம் உனக்குள் இருக்கையிலே காலமென்று
சொல்லுமொரு பூதமுண்டோ சொல்.

★ ★

அங்கையி னுள்ளே அடங்கிடுவாய்! கைவிரித்தால்
எங்கும் நிறைந்தே இருந்திடுவாய்!—பொங்கும்
அமிழ்தம் சமைப்பாய்! அமிழ்தாவாய்! எல்லால்
இமிழ்திரை முந்நீர் எடுத்து.

★ ★

எல்லாம்வல் லாய்நீ! இயற்கையும்நீ! தாயாகி
எல்லாமே ஈன்றாய்நீ! எல்லாம்நீ!—எல்லையிலாத்
தூயோய்நீ! தொட்டும் தொடாதோய்நீ! ஆயுங்கால்
நீயே நினக்கு நிகர்.

★ ★

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 13 | திருநீற்றின் பெருமை | .10 |
| 14 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 15 | பக்தி | .20 |
| 16 | பௌத்தம் | .20 |
| 17 | பிரமம் | .20 |
| 18 | அவதாரம் | .20 |
| 19 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 4-10 | 2.50 |
| 20 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 21 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 22 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered at the G. P. O. as a Newsparer M. L. 59/300.

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இறைவன் திருவருளால் இம்மாதச்சுடருடன் ஆத்மஜோதிக்கு 24-வது ஆண்டு ஆரம்பமாகி 8-9 இதழ்களும் வெளிவந்துவிட்டது.

பலவித கஷ்டங்களுக்கிடையே ஜோதி வெளியாகிறது. சந்தாதாரர்கள் தமது சந்தாவை உடன் அனுப்பி வைத்தால் ஜோதியின் வளர்ச்சிக்குப் பேருபகாரமாய் இருக்கும்.

தங்கள் நண்பர்களில் ஒருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து உதவினுல் ஜோதியின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்தவர்கள் ஆவீர்கள்.

## ஆத்மஜோதி நிலயம்,

## நாவலப்பிட்டி, (இலங்கை).

அச்சிடுவிப்போர்:— ஆத்மஜோதி நிலயத்தினர்.
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 16-7-72.